## 68,893 கி.மீ. நீளச் சாலைகள் பராமரிப்பு! இரண்டாம் கட்டமாக

# ரூ.1055 கோடியில் - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம்!

## சட்டப்பேரவையில் நெடுஞ்சாலைகள் -சிறு துறைமுகங்கள் - பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கையில் 23 அறிவிப்புகளை அறிவித்து அமைச்சர் எ.வ.வேலு பதிலுரை!

**சென்னை, ஜூன் 27-**

**சட்டப்பேரவையில் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மற்றும் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் அமைச்சர் எ.வ.வேலு 23 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு பதிலுரையாற்றுகையில், 68,893 கிலோ மீட்டர் நீளச் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன என்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடம் பெறப் பட்ட கோரிக்கைகளைச் செயல்படுத்த இரண்டாம் கட்டமாக ரூ.1,055 கோடி மதிப்பீட்டில் ஆற்றுப் பாலங்கள், புறவழிச் சாலைகள், நிலம் எடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்தார்.**

**சட்டப் பேரவையில் மானியக் கோரிக்கையில் அமைச்சர் எ.வ.வேலு பதிலுரை வருமாறு:-**

பேரவைத் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டை மேன்மைப்படுத்த சிந்தனையாலும், செயலாலும், உருவாக்கி தந்தவர்கள் மும்மூர்த்திகள்.

பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார்! தென்னாட்டின் பெர்னாட்ஷா என்று சொல்லப்பட்ட பேரறிஞர் அண்ணா! தலைமை பண்பை தன்னகத்தே கொண்டவர்! மானிடம் போற்றும் மாபெரும் தலைவர்! "உடன்பிறப்பே" எனும் மந்திரச்சொல்லுக்கு சொந்தக்காரர்! ஊடக உலகில் உதய சூரியன்! சமூக நீதியின் காவலர்! பேச்சுக் கலையின் பிதாமகர்! தமிழ்நாட்டினை உச்சத்தில் நிறுத்தியவர்! மருத்துவ வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தவர்! உயர்கல்வியின் கலங்கரை விளக்காக மாறியவர்! கவிஞர் பெருமக்கள், அறிஞர் பெருமக்கள், ஆய்வாளர்கள் இப்படி அவரை அழைத்தாலும், "அண்ணன் கலைஞரே" என்று நாங்கள் அழைக்கிற போது, "தெவிட்டாத தேன்அமுதாய் எங்கள் நெஞ்சம் இனிக்கிறது". (மேசையைத் தட்டும் ஒலி) அந்த இன்முகத்தினுடைய மும்மூர்த்திகள் அவர்களுக்கு, என் முதல் வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**"அஞ்சாமை ஈகை அறிவு ஊக்கம் இந்நான்கும்**
**எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு."**

என்று வள்ளுவப் பெருந்தகை அப்படித்தான் குறிப்பிடுகிறார். எதற்கும் அஞ்சாத துணிவும், கசியும் இரக்கமும், சீரிய அறிவும்! ஆற்றலும், சிறந்த குறிக்கோள் உள்ளவர்கள்தான் நாட்டினுடைய வேந்தராக இருக்க முடியுமென்று வள்ளுவர் பெருந்தகை 2,000 ஆண்டுக் காலத்திற்கு முன்னால் குறிப்பிட்டிருக்கிறார். அத்தகைய அனைத்தையும் பெற்றவர்கள் திராவிட நாயகர், நம் தலைவர் தமிழ்நாட்டினுடைய முதல்வர் அண்ணன் தளபதி அவர்கள் மட்டுமே. ஹ

பகுத்தறிவு, சுயமரியாதை பாதைகளை வகுத்து தந்தது, தந்தை பெரியார்; அரசியல் அமைப்பை வகுத்து தந்தது அண்ணல் அம்பேத்கர்; கல்வி, தொழில் வளர்ச்சியை நமக்குத் தந்தவர், பெருந்தலைவர் காமராசர்; இனமானம், தன்மானம், மக்களுக்கு தந்தவர் பேரறிஞர் அண்ணா; சமத்துவம் சமூகநீதியால், தன்மானம் மீட்டுத் தந்தவர், என் நெஞ்சமெல்லாம் நினைத்து இனித்துக் கொண்டிருக்கிற முத்தமிழறிஞர் அண்ணன் கலைஞர்; (மேசையைத் தட்டும் ஒலி) அவர் நமக்கு இல்லை. ஆனால், அத்தனைப்பேருடைய மொத்த வடிவமாக தமிழ்நாட்டு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி மு.க. ஸ்டாலின் என்பவர் நம் கண்ணுக்குத் தெரிகிறார். எனவே, அவருக்கு என் வணக்கங்கள்.

தங்களுக்கும், என் மண்ணைச் சார்ந்த பேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, அவை முன்னவர் துரைமுருகன். மூத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி ஆகியோருக்கும், என் சக ஏனைய அன்பு அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு கொறாடா, ஏனைய சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், என் சிரம் தாழ்ந்த வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவையில், நான் நின்றுபேசுகிறேன் என்று சொன்னால், இதற்கு எனக்கு உரிமை தந்தவர்கள் வாக்களித்தவர்கள் திருவண்ணாமலை தொகுதி வாக்காள பெருமக்கள். எனவே, திருவண்ணாமலை தொகுதி வாக்காள பெருமக்களுக்கும், இந்த நேரத்திலே என் நன்றியை தெரிவித்துக் கொள்ள நான் விரும்புகிறேன்.

புறநானூற்றுப் பாடலிலே "சிற்றில் நற்றூண் பற்றி" என்கிற ஒரு தலைப்பிலே பாடுகிறார்.

**"சிற்றில் நற்றூண் பற்றி,**
**நின்மகன்யாண்டு ளனோ!**
**என் மகன் யாண்டுளன் அறியேன்!**
**புலி சேர்ந்து போகிய கல்அளை போல!**
**ஈன்ற வயிறு இதுவே!**
**தோன்றுவான் மாதோ, போர்க்களத்தில்!"**

என்று ஒரு பெண் புலவர் பாடியிருக்கிறார். அதற்கு என்ன பொருள் என்று சொன்னால், ஒரு சிறிய வீட்டிலே ஒரு தாய் வசித்துக் கொண்டிருக்கிறார். அவரைப் பார்த்து வீட்டிற்கு வந்த பெண், உன் மகன் எங்கே இருக்கிறான் என்று கேட்டாள். அதற்கு அந்த வீரத்தாய் சொன்னார், என்னுடைய மகன் எங்கு உள்ளான் என்பது எனக்கே தெரியவில்லை! காரணம், புலி தங்கிய குகை மாதிரி, அவனை பெற்றெடுத்த நான் இங்கே இருக்கிறேன். புலி போல் செயல்படக்கூடிய என் மகன், போர்களத்திற்கு சென்று எதிரிகளை வென்றிருப்பான் என்று நான் எண்ணுகிறேன் என்று அந்த வீரத்தாய் குறிப்பிட்டார். புறநானூறும் இப்படிதான் குறிப்பிடுகிறது. எனக்கு எதைக் காட்டுகிறது என்று சொன்னால், தாயுமானவராக இருந்து, இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிற எங்களுடைய திராவிட தாய்பெற்றெடுத்த இளம் புலி, நடைபெற்ற ஜனநாயகப் போரில் எதிரிகளை துவம்சம் செய்து, நாற்பதுக்கும் நாற்பது வெற்றிகாண உழைத்த எங்கள் திராவிட புலி! தம்பி உதய நிதியே!

நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில், 40 தொகுதியில் 24 நாட்கள், 122 தேர்தல் பிரச்சார முகாம்கள், 3,726 நிமிடங்கள் முழங்கி வெற்றிக்கு வித்திட்டவர், "செந்தமிழ் நாட்டின் சிந்தனைச் செல்வன்", "திராவிடக் கலை வேந்தன்" எங்கள் இளவல், உதயநிதி தம்பி அவர்களுக்கு என் நன்றியையும், பாராட்டுதல்களையும் இந்தநேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சாலை, பொதுவாக "சாலை" என்ற சொல்லுக்கு என்ன குறிப்பிடுவார்கள் என்று சொன்னால், "விரிந்து பரந்த இடம்" என்பதுதான் அதற்குப் பொருளாக இருக்கிறது. நானும் பல அகராதி எல்லாம் படித்துப் படித்துப் பார்த்தேன், ஆக இப்படித் தான் சொல்கிறார்கள். சாலை என்று சொன்னால் விரிந்து பரந்த இடம் என்று அப்படிதான் பொருள் சொல்லப்படுகிறது. உதாரணமாக, "தொழிற் சாலை" என்பது விரிந்து, பரந்த பெரிய இடமாக இருப்பதால் அதற்கு தொழிற்சாலை என்று சொல்கிறார்கள். அந்த வகையில்தான், வைத்தியசாலை, சிறைச்சாலை, அறச்சாலை, பண்டகச்சாலை, யாக சாலை, ஆயுதச்சாலை, நாம் படிக்கிற பாட சாலை. அதனால்தான் நெடுந்தூரங்களில் உள்ள இடங்களை இணைக்கும் விரிந்து பரந்த பகுதியாக இருப்பதால் இந்தத் துறைக்கு, "நெடுஞ்சாலைத் துறை" என்று இலக்கியம் அப்படிதான் குறிப்பிடுகிறது. மனிதர்களுக்கு தலை முதல் கால் வரை, இணைப்பை ஏற்படுத்துவது எது தெரியுமா? இரத்த நாளங்கள்தான்! அதுபோன்று, தமிழ்நாட்டினுடைய கிராமங்களையும், நகரங்களை யும், துறைமுகங்களையும், விமான நிலையங்க ளையும், தொழிற்சாலை களையும், ஒருங்கே இணைக்கிற ஒரே சக்தி நெடுஞ்சாலைத் துறைக்கு மட்டும்தான் உண்டு. ஏனென்று சொன்னால் வீட்டிலிருந்து நாம் வெளியே வந்தால் சாலைகளில் தான் கால் வைக்க வேண்டும். இதன் முக்கியத்துவத்தை அறிந்த காரணத்தினால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைத் துறைக்கு மூலதனச் செலவில், 40 விழுக்காடு அளவிற்கு ஆண்டாண்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார். நெடுஞ்சாலையின் மூலம், தமிழ்நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு வித்திடுகிறார். இத்தகைய பெருமை வாய்ந்த நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைக்கு, என்னை அமைச்சராக்கி, வழிகாட்டிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்களை, "எண்ணி எண்ணி" நான் பெருமிதம் அடைகிறேன்.

இந்தத் துறை எப்படி இயங்குகிறது என்று சொன்னால், நெடுஞ்சாலைத் துறைமூலம், மாநில நெடுஞ்சாலை12,349 கிலோ மீட்டர் நீளம், மாவட்ட முக்கிய சாலை12,034 கிலோ மீட்டர் நீளம், மாவட்ட இதர சாலை42,833 கிலோ மீட்டர் நீளம், தேசிய நெடுஞ்சாலைகள்1,677 கிலோ மீட்டர் நீளம் ஆக மொத்தம் மாநில அரசாங்கத்தின் மூலமாக 68,893 கிலோ மீட்டர் நீள சாலைகள் பராமரிக்கப் படுகின்றன. இதன் நிர்வாக அமைப்பு என்று எடுத்துக்கொண்டால், முதன்மை இயக்குனர், நிர்வாகம், இயக்குனர், நெடுஞ்சாலைத் துறை ஆராய்ச்சி நிலையம் மற்றும் தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட 8 தலைமைப் பொறியாளர்களின் தலைமையில் மொத்தம் 10 அலகுகளாக நெடுஞ்சாலைத் துறை பயணித்துக் கொண்டிருக்கிறது. முதலமைச்சர் சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (CMRDP), போக்குவரத்துச் செறிவு மற்றும் முக்கிய இணைப்புகளின் அடிப்படையில், சுங்கச் சாவடி இல்லாத, நான்கு வழிச் சாலையை உருவாக்குவதே இந்த அரசினுடைய நோக்கமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் இந்தாண்டு, இதுவரை ரூ.1,397 கோடி மதிப்பீட்டில், 166 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்தப்பட்டு உள்ளன.

**இத்திட்டத்தில், 185 கிலோ மீட்டர் நான்கு வழிச் சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.**

சாலை ஒடுதளப்பாதை மேம்பாட்டுத் திட்டம்: அதுதான் பெரும்பான்மையாக நடைபெறுவது. சீரான போக்குவரத்தை மேம்படுத்த, சாலையின் மேற்பரப்பு வலுவுடன் இருக்க, சென்ற ஆண்டு, ரூ.406 கோடி மதிப்பீட்டில், 1,046 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இத்திட்டத்தில், 1,700 கிலோ மீட்டர் நீள சாலைப் பணிகள் ரூ.470 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன.

கிராமச் சாலைகள் மேம்பாடு: கிராமச் சாலைகளை மேம்படுத்துவதில் இந்த அரசு தனிக் கவனம் செலுத்துகிறது. கடந்த ஆண்டு, 780 கிலோ மீட்டர் நீளச்சாலைகள் ரூ.878 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாட்டுக்காக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கடந்த நிதியாண்டில், 1,735 கிலோ மீட்டர் நீளச் சாலைகள், ரூ.1,903 கோடி மதிப்பீட்டில், மேம்படுத்தப்பட்டுகின்றன. மேலும், உள்ளாட்சி சாலைகளில். 246 பாலங்கள், ரூபாய் 833 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு, தங்கு தடையற்ற போக்குவரத்து உறுதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டில் மேலும் இந்த பணிகள் தொடரும்.

**புறவழிச்சாலைகள் அமைத்தல்**: புற வழிச்சாலைகளைப் பொறுத்தவரையில், போக்குவரத்தினை தங்குத் தடையில்லாமல் செல்வதை உறுதி செய்வதுடன், நகர்ப்புறப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதுதான் அரசின் பணி. கடந்த ஆண்டு, இராசிபுரம், பார்த்திபனூர் மற்றும் திருத்துறைப்பூண்டி ஆகிய மூன்று புறவழிச்சா லைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 21 புறவழிச்சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது, 27 புறவழிச்சாலைகளில் நில எடுப்புப் பணிகளும் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. 38 புறவழிச் சாலைகளில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

**தரைப்பாலங்களை உயர்மட்டப் பாலங்களாக மாற்றும் பணி:** மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கினால் தரைப் பாலங்கள் தண்ணீரில் மூழ்குவதால், போக்குவரத்துப் பாதிக்கப்பட்டு, கிராமங்கள் துண்டிக்கப்படுகின்றன. மக்களின் அன்றாட நடவடிக்கைகள், சரக்கு போக்குவரத்து, விளைபொருட்களைச் சந்தைப்படுத்துதல், மாணவர்கள் பள்ளிக்குச் செல்வது போன்றவற்றில் உள்ள இடையூறுகளை இந்த அரசு தடுக்கவேண்டியதன் காரணமாக, சென்ற ஆண்டு, ரூ.759 கோடி மதிப்பீட்டில், 272 தரைப்பாலப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 237 தரைப் பாலங்கள், உயர்மட்டப் பாலங்களாக கட்டப்பட்டுள்ளன.



**இரயில்வே மேம்பாலங்கள்:**

இரயில்வே மேம்பாலங்களைப் பொறுத்தவரையில், சாலை போக்குவரத்துப் பாதுகாப்பின் முக்கிய அம்சமாகும். 20222023 ஆண்டில் இந்த ஆட்சி வந்த பின்னர், 10 பாலப் பணிகள் அறிவிக்கப்பட்டது. சென்ற ஆட்சியில் பல பாலங்கள் அறிவிக்கப்பட்டு, இன்னும் நிலுவையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு தேவையான பணிகளை நிறைவேற்றுவதில் நாங்கள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனேயே, 20222023 ஆண்டில் 10 பாலப் பணிகளில், நிலஎடுப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டதால், 9 பணிகளுக்கான நிலஎடுப்பு முடிந்து, கட்டுமான பணிகளை இந்த அரசு தொடங்கிவிட்டதென்பதை மகிழ்ச்சியான செய்தியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (2023

## கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவமனை - மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்! கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கம்!

2024) 4 பாலப்பணிகளுக்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 3 பாலப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால், தஞ்சாவூர் Delta பகுதியில் நானும், அண்ணன் நேரு அவர்களும் சில நேரங்களில் அண்ணன் கலைஞர் அவர்களோடு ஒரே carல் பயணித்திருக்கிறோம். நீடாமங்கலம் என்று ஒரு ஊர் இருக்கிறது. திருவாரூருக்குச் செல்லும் வழி. நீடாமங்கலம் வழியில் சென்றால், ஒரு மணி நேரம் அல்லது 1 மணி நேரம் காத்துக் கிடக்க வேண்டும். பல நேரங்களில் carல் பயணித்தபோது, அண்ணன் கலைஞர் அவர்கள், 'இதற்கு எப்போதுதான்யா பாலம் கட்டப்படும்' என்று கேட்பார்கள். ஆனால் இன்றைய திராவிட மாடல் ஆட்சியின் முதல்வர், கலைஞர் அவர்களின் புதல்வர் அவர்களால் இன்றைக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருந்த நீடா மங்கலம் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

நெடுஞ்சாலைத் துறையைப் பொறுத்தவரையில், தொடர்ந்து இதுபோன்று பல பணிகள் நாங்கள் செய்துகொண்டிருந்தாலும்கூட, சில பணிகள் தற்போது முன்னிலைப் படுத்தப்படுகின்றன.

**சாலை பாதுகாப்பு**: சாலைப் பாதுகாப்பென்பது அத்தியாவசியமான ஒன்று. ஏனெனில் எங்கு பார்த்தாலும் விபத்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதனை உணர்ந்து முதலமைச்சர் அவர்கள் எனக்கு ஆணையிட்டார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்றோம். அம்மாவட்டங்களில் மாவட்ட அமைச்சர்களின் ஒப்புத லோடு, அவர்கள் தலைமையில், 22 மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட அமைச்சர் களுடன், மாவட்ட ஆட்சியர்கள், நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள், மக்கள் நல்வாழ்வுத்துறையைச் சார்ந்தவர்கள், காவல்துறை, போக்குவரத்துத் துறை மற்றும் கல்வித் துறை ஆகிய அனைத்துத் துறைகளையும் அடக்கி, அதோடு மட்டுமல்லாமல், அந்தந்த மாவட்டங்களின் பொது நலச் சங்கங்களை நடத்திக் கொண்டிருப்பவர்களான, Lion's Club. Rotary Club போன்ற பொது நலச் சங்கங்கள், போக்குவரத்து ஓட்டுநருக்கு பயிற்சியளிக்கின்ற பயிற்றுனர்கள், கல்லூரிகளை நடத்திக்கொண்டிருக்கும் கல்லூரி நிர்வாகத்தினர் மற்றும் மேலும் சொல்வதானால், இந்த அவையின் முன் வரிசையில் அமர்ந்திருக்கின்ற அனைவரும் அதில் கலந்துகொண்டார்கள் என்று சொல்வதால், அதுவும் பெருமையான ஒன்றுதான். அனைத்து சட்டமன்ற உறுப்பினர் களும் கலந்து கொண்டு அதனை இந்த அரசு மேற்கொண்டது. அந்தவகையில், ஒரு மாவட்டத்தில் அதிகாரிகளுடன் சாலை பாதுகாப்பு ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டு, இக்கூட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் சாலைப் பாதுகாப்புடன் தொடர்புடைய அனைத்து பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற்று கரும்புள்ளிகள் (Black spots) மற்றும் சாலை சந்திப்புகளில் விபத்துக்களைத் தடுப்பதற்கு தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

விபத்து தரவுகளின் அடிப்படையில், பொறியியல் மேம்பாடுகளுக்குத் தேவைப்படும் 72 சாலை சந்திப்புகளை (Junction Improvements) ரூ.110 கோடியில், மேம்படுத்த கடந்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து. ரூ.395 கோடி மதிப்பீட்டில், 792 பணிகள் எடுக்கப்பட்டு, 213 சாலைப் பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்ப ட்டுள்ளன. மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

சுற்றுலாத் துறை அமைச்சர் இங்கு சிறப்பாக உரையாற்றினார்கள். நெடுஞ்சாலைத் துறை என்று சொன்னால் மரம் வைக்கின்ற பழக்கம் நீண்ட காலமாக இருக்கிறது. ஆனால், மரம் நடுதல் என்ற பெயரிலே செடியை நட்டு வைத்திருப்பார்கள். எங்குப் பார்த்தாலும் செடியாக நடப்பட்டிருக்கும். அது மரமாக இருக்காது. முதலமைச்சர் அவர்கள் என்னிடத்தில் ஆணையிட்டார்கள். இந்தக் மரக் கன்று நான் பார்க்கின்றபோது மரமாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனடிப்படை யிலே எங்கள் துறையைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்களை அழைத்துக்கொண்டு இங்கிருந்து நேரடியாக ஆந்திர மாநிலத்தில் ராஜமுந்திரிக்கே போனேன். அங்கு 8 அடிக்கு மேல் தான் மரங்கள் வைக்க வேண்டும் என்ற துறையின் சார்பாக ஆணை யிட்டதன் அடிப்படையிலே தமிழ்நாடு முதலமைச்சர் நூற்றாண்டுவிழாவை முன்னிட்டு 5 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட வேண்டும் என்று திட்டமிடப்பட்டு நெடுஞ்சாலைத் துறை மூலமாக 6, 8 அடிக்கு மேல்தான் மரங்கள் நடவேண்டும் என்று எங்கள் துறையைப் பற்றி பெருமையாகக் குறிப்பிட்டார்கள். இந்த மரம் நடப்படும் பணி மேலும், மேலும் தொடரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக சாலைகள் பள்ளம் திடீரென்று தோன்றிவிடுகிறது. மழை பெய்கிறது. இது இயற்கையான ஒன்று. இந்தப் பள்ளம் குறித்து யாரிடத்தில் சொல்வது. யாரிடத்தில் புகார் அளிப்பது. இப்படி ஒரு குழப்பம் மக்கள் மத்தியில். இதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, சாலைகளில் பள்ளங்கள் இருந்தால் அவற்றை யாரிடம் சொல்வது! எவ்வாறு புகார் அளிப்பது! என்ற சந்தேகத்தை நீக்கும் வகையில், பொதுமக்களின் பங்களிப்பும் இதில் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் "நம்ம சாலை செயலி". நம்ம சாலை செயலி எனும் அற்புதமான திட்டத்தை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் இளவல் உதயநிதி ஸ்டாலின் அவர்களால், 1112023 அன்று துவக்கி வைத்தார்கள். செல்போன் மூலம் புகார் செய்ய வேண்டும். மாநில நெடுஞ்சாலைகளில், 24 மணி நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகளில் 72 மணி நேரத்திலும், சாலையில் உள்ள பள்ளங்களை செல்போனில் படம் எடுத்து அனுப்பினால்போதும் மாநில நெடுஞ்சாலை களில், 24 மணி நேரத்திலும், மாவட்ட முக்கிய சாலைகள், மாவட்ட இதர சாலைகளில் 72 மணி நேரத்திலும், உடனடியாக சாலைகள் சரிசெய்து உங்களுக்கு திருப்பியனுப்பப் படும். அதுதான் நம்ம சாலை செயலி.

**சரி செய்யப்படும் புகார்கள்!**

அதனடிப்படையில் குறிப்பிட்ட காலத்தில், 8,650 புகார்கள் பெறப்பட்டு, அவைகள் அனைத்தும் சரி செய்யப்பட்டு மக்களுடைய பாராட்டுகளை பெற்று நம்ம சாலை செயலி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதேமாதிரி துறையில் வெளிப்படைத் தன்மை வேண்டும் என்று முதலமைச்சர் கருதிய காரணத்தினால்தான் Project Monitoring Information System என்ற ஒரு systemஐ உருவாக்கினோம். PMIS என்ற புதிய மென்பொருளின் மூலம் திட்டத்தின் தொடர்புடைய அரசின் ஒப்புதல், மதிப்பீடு தயாரித்தல், ஒப்பந்தப் புள்ளி கோருதல், பணியின் முன்னேற்ற நிலைகள், பணி நிறைவுறும் நாள், போன்ற எல்லா தரவையும் தொடர்ந்து எல்லா விவரங்களையும் கணினியில் பதிவேற்றம்செய்யப்பட்டு, வெளிப்படைத் தன்மையுடன் இருக்கிற ஒரு துறையாக இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையை நாம் உருவாக்கியிருக்கிறோம். அதோடு மட்டுமல்ல சில புதுமையான திட்டங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதற்காக, நாம் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு போன்ற இடங்களுக்கு சுற்றுலா செல்கிறோம். அங்கு போய் திரும்ப வருகிற நிலையில் மண் சரிவு ஏற்பட்டு விடுகிறது. இயற்கை பேரிடர் காரணமாக திரும்ப வீட்டிற்கு திரும்ப முடியாத நிலை ஏற்படுகிறது.

முதலமைச்சர் ஆணையிட்டதன் அடிப்படையில்தான் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, கொல்லிமலை, வால்பாறை போன்ற மலைப்பகுதிகளில், நிலச்சரிவினால் ஏற்படும் உயிரிழப்பு, பொருட்சேதம் ஆகியவற்றை தடுக்க நிலச்சரிவு மேலாண்மை அவசியமாகிறது. அதற்காக புதியதாக தொழில்நுட்பத்தை IIT டெல்லி, IIT சென்னை, அண்ணா பல்கலைக் கழகம் போன்ற பேராசிரியர் பெருமக்கள் மற்றும் துறைத் தலைவர்கள் எல்லாம் ஆய்வு செய்ததன் அடிப்படையில் இன்றைக்கு மலைப் பகுதியிலே புதிய தொழில் நுட்பத்தை நுழைத்துக் கொண்டிருக்கிறோம். மண் ஆணி (Soil Nailing), வலுவூட்டப்பட்ட மேற்பரப்பில் புல் மற்றும் செடிகளை வளர்ப்பது (Geo turfing, Coir mat) மற்றும் கேபியான் (Gabion) தடுப்புச் சுவர் போன்ற நவீன தொழில்நுட்ப முறைகளி;ன மூலம் மண்ணரிப்பை வெகுவாக தடுக்க பயன்படுத்தி வருகிறோம்.

எனவே, அப்படிப்பட்ட திட்டத்தின்மூலமாக இன்றைக்கு பரீட்சார்த்தமாக. ஊட்டிக்கு நான் சென்ற இடங்களிலெல்லாம் இப்போது அந்தப் பகுதிகளிலே மண் சரிவே அங்கு இல்லை என்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. நிரந்தர வெள்ள சீரமைப்பு பணிகள் மிக்ஜாம் புயல் பாதித்த சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் பகுதிகளையும், அதைபோல, தென் மாவட்டங்களில், குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில், இதுவரை வரலாறு காணாத கனமழை பெய்தது. தாமிரபரணி ஆற்றில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உடைப்பு ஏற்பட்டது. அப்படிப்பட்ட நிலையில்தான் முதலமைச்சர் அவர்கள் எங்கள் துறைக்கு ஆணையிட்டார்கள். அதனடிப்படையில் நாங்கள் வேகமாக விரைந்து சென்றோம். இது சட்டமன்ற உறுப்பினர் அருமைச் சகோதரர் காங்கிரஸ் பேரியக்கத்தைச் சார்ந்த செ. ஊர்வசி அமிர்தராஜ்க்கு என்ன நிலைமை என்பது தெரியும்.

இரவு அங்கு செல்லும்போது வெள்ளக்காடாக இருந்தது. என்ன செய்வதென்றே புரியாத நிலை. அப்படிப்பட்ட நிலையில்தான் நாங்கள் சென்றோம். நாங்கள் சென்று உடனுக்குடன், ஏனென்றால் சாலை இல்லையென்றால், பள்ளிக்கு செல்ல முடியாது. சாலை இல்லையென்றால், மருத்துவமனைக்குச் செல்ல முடியாது. சாலை இல்லையென்றால் உணவுப் பொருட்கள் வாங்க இயலாது. சாலை என்பது வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது. வெள்ளப்பெருக்கின்போது சாலைகளைச் செப்பனிடுவதற்காக, இரவுபகல் பாராமல் சாலைப் பணியாளர்கள் 800 பேர், பொறியாளர்கள் ஏறத்தாழ 75 பேர், தலைமைப் பொறியாளர்கள் 5 பேர், இரண்டு துறையினுடைய செயலாளர்கள் என நாங்கள் அத்தனை பேரும் அங்கு முகாமிட்டு, அந்த சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டோம். பொதுவாக, அங்கே ஈடுபட்ட மக்கள் பிரதிநிதிகள், தூத்துக்குடியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், அருமைச் சகோதரி கீதாஜீவன், அனிதா ராதா கிருஷ்ணன் நேரடியாகத் தெரியும். நான்கூட நகைச்சுவைக்காகத் தெரிவித்தேன். இந்த "வெள்ள நிவாரணப்பணிகளுக்காகவே JCB இயந்திரத்தை கண்டுபிடித்தார்களோ" என்று நகைச்சுவையாகத் தெரிவித்தேன். காரணம் என்னவென்றால், JCB இயந்திரத்தின் bucketயிலே, அங்கு 8 அடி முதல் 9 அடி வரை தண்ணீர் செல்கிறது. மக்கள் மாடிப்பகுதியில் தஞ்சமடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு தண்ணீர் கொடுப்பது, எப்படி பால் powder கொடுப்பது? நெடுஞ்சாலைத்துறை வசமிருந்த பெரும்பான்மையான JCB இயந்திரங்களை மீட்புப் பணிகளில் பயன்படுத்தினோம்.

## கர்ப்பிணி சகோதரியை கன மழையில் இருந்து ஜே.சி.பி. எந்திரம் மூலம் காப்பாற்றினோம்!

தமிழ்நாட்டில் முதன்முதலாக இந்த முறையை நாங்கள்தான் துவக்கினோம். JCB இயந்திரத்தின் bucket மூலமாக பால் packet, தண்ணீர் packet போன்றவைகளை மக்களிடம் கொண்டுசேர்த்தோம். அதுபரவாயில்லை. நான் மக்கள் பிரதிநிதி. தொண்டனாக இருந்து அமைச்சராகி இருக்கிறேன். அது எனக்கு பொருத்தமாக இருக்கும். ஆனால், இந்தத் துறையினுடைய செயலாளர்கள், கோட்டையிலே அமர்ந்துகொண்டு, அரசுக்கு உதவியாக இருந்து நடத்தக்கூடிய என்னுடைய இரண்டு துறைச் செயலாளர்களும் அந்த மீட்புப் பணிகளில் எங்களுடன் ஈடுபட்டனர். அந்த JCB இயந்திரத்தின் bucketன் இரண்டு பக்கங்களிலும், இரண்டு செயலாளர்கள் நின்று கொண்டார்கள். பால் packet எடுத்து போட்டுக் கொண்டு வந்தார்கள். தண்ணீர் packet போட்டார்கள். I.A.S. அதிகாரிகள் எப்படியிருப்பார்கள் என்று நமக்கு தெரியும். ஆனால், இப்படி நிவாரணப் பொருட்களை கொடுத்துக்கொண்டு செல்கிறோம். அவ்வாறு கொடுத்துக் கொண்டு செல்லும்போது ஒரு அவலக்குரல். காரணம், மகப்பேறு காலம். அந்தக் குரலைக் கேட்டவுடனே, வண்டியை நிறுத்திவிட்டு என்ன என்று கேட்கிறபோது, ஒரு அன்பு சகோதரிக்கு மகப்பேறு காலம். இன்னும் இரண்டு மணிநேரங்களில் பிரசவித்து விடுவார், எப்படி செல்வது என்று எங்களுக்குத் தெரியவில்லை. அந்தக் குரலைக் கேட்டவுடன், எங்களுடைய துறைச் செயலாளர்களும், நானும் அந்த JCB இயந்திரத்தை அங்கேயே முதல் மாடியிலேயே முட்டுக்கொடுத்து, அந்தச் சகோதரியை அந்த JCB இயந்திரத்தின் bucketன் மூலமாக இறக்கி, அந்த bucketலேயே இருந்தபடியே, கிட்டத்தட்ட ஒன்றரை மணிநேரம் அவரை அழைத்துக் கொண்டு வந்து, அந்த அன்பு சகோதரிக்கு அந்த வெள்ளப்பெருக்கின் போது, நாங்கள் உதவியாக இருந்தோம் என்று சொன்னால் அது மிகையாகாது. அது எங்கள் துறைக்கு ஏற்பட்டிருக்கிற பெருமை. அதோடு மட்டுமல்ல,

**ஏரல் பாலப் பணிகள்!**

இங்கு உறுப்பினர் ஊர்வசி அமிர்தராஜ் ஒன்று குறிப்பிட்டார்கள். ஏரல் பாலத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஏரல் என்று சொன்னாலே தூத்துக்குடி பகுதியில் இருப்பவர்கள் 'குட்டி ஜப்பான்' என்று சொல்கிறார்கள். ஏனென்றுசொன்னால், அவ்வளவு பெரிய வியாபாரம் அந்த 'குட்டி ஜப்பானில்' நடைபெறுகிறது. அங்கு அனைத்து மதத்தினரும் இருக்கிறார்கள். இஸ்லாமிய பெருமக்கள், கிறித்துவர்கள், இந்துக்கள் என்று, அண்ணன்தம்பியாக வாழ்கிற ஒரு பகுதி அந்த 'ஏரல்'. அந்த 'குட்டி ஜப்பான்' அங்கிருந்து, ஏரலுக்கும் நசரேத்துக்கும் இருக்கிற பாலம் தாமிரபரணியில் உடைப்பு ஏற்பட்டு விட்டது. வெளியே வர முடியாத நிலைமை. மூன்று தினங்கள் இரவுபகல் பாராமல் எங்களுடைய துறையின் செயலாளர்கள், பொறியா ளர்கள், நாங்களெல்லாம் roadயிலே உட்கார்ந்து கொண்டு, எப்படியாவது தற்காலிக பாலப் பணிகளை நிறைவேற்ற வேண்டுமென்று பணியாற்றிக் கொண்டிருந்தோம். ஒருநாள் ஏறத்தாழ மூன்று மணி இருக்கும். நாங்கள் roadல் stove வைத்துக்கொண்டு, அங்கு சமையல் செய்து சாப்பிட்டுக்கொண்டிருந்தோம்.

நானும், என்னுடைய துறையினுடைய செயலாளர்களும். பிரதீப் யாதவ், சந்திரமோகன், roadல் உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது, அப்போது, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, அங்கே வந்தார்கள். என்ன தாங்கள் இங்கிருக்கிறீர்களே என்று கேட்டார். மூன்று நாட்களாக இதுதான் எங்கள் பிழைப்பு. நாட்டு மக்களுக்கு உடனே பாதை அமைத்துத் தர வேண்டும். பாலத்தை அமைத்துத் தர வேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்தத் துறை மிகவும் சிறப்பாக

தொடர்ச்சி 6 – ஆம் பக்கம்